இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 225 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 12 – புதன்கிழமை 26 மார்ச் 2025 – மதுரை 16 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 225 : Thiruvalluvar Year - 2056 - Panguni 12 - Wednesday 26 March 2025 - Madurai 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.3.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் 2025–2026 ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.3.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் 2025–2026 ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் துறையின் உயர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் முனைவர் எஸ்.விஜயகுமார், முனைவர் தா. கார்த்திகேயன், ஜெ. குமரகுருபரன், ஹனீஷ் சாப்ரா, கே. விவேகானந்தன், டாக்டர் டி.ஜி.வினய், கிரண் குராலா, எஸ். சிவராசு ஆகியோர் உள்ளனர்.

## இது பணப் பிரச்சினை அல்ல; நம் இனப் பிரச்சினை! இளைய சமுதாயத்தைக் காக்கும் பிரச்சினை !

# மும்மொழித் திட்டத்தை எப்போதும் ஏற்க முடியாது!

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்ட அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 26-**

**சட்டப்பேரவையில் நேற்று இருமொழிக் கொள்கை தொடர்பான சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இத்தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது “மும்மொழித் திட்டத்தை ஒருபோதும் ஏற்க முடியாது” என்றும் “இது பணப் பிரச்சினை அல்ல; நம் இனப் பிரச்சினை, இளைய சமுதாயத்தைக் காக்கும் பிரச்சினை” என்றும் திட்டவட்டமாக கூறினார்.**

சட்டப் பேரவையில் நேற்று கேள்வி நேரம் முடிவுற்றதும் டாக்டர் எழிலன் உள்ளிட்ட உறுப்பினர்கள் மும்மொழிக் கொள்கையை ஏற்றால் தான் நிதி தர முடியும் என்ற சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசினர்.

இத் தீர்மானத்தில் பா.ஜ.க நீங்கலாக தி.மு.க. டாக்டர் எழிலன் மற்றும் கட்சித் தலைவர்கள் வேல் முருகன், ஈஸ்வரன், செல்வப்பெருந்தகை, ஷாநவாஸ், ஜி.கே. மணி, ட்டி.இராமச்சந்திரன், நாகை மாலி, அப்துல் சமது, சின்னப்பா, ஆர்.பி.உதய குமார் ஆகியோர் பேசினர்.

இறுதியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இருமொழிக் கொள்கை தொடர்பான சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பதிலளித்து ஆற்றிய உரை வருமாறு:

இங்கு இருமொழிக்கொள்கை குறித்து என்ன உணர்வோடு நாங்கள் இருக்கிறோம், தமிழ்நாடு இருக்கிறது என்பதை பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் ஏன் அனைத்து கட்சிகளின் உறுப்பினர்கள், குறிப்பாக, பாரதிய ஜனதா கட்சியை தவிர்த்து அனைத்துக் கட்சிகளும் இங்கே தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்திக் காட்டியிருக்கின்றார்கள்.

நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதிகாரிகள் மூலமாக இந்த இருமொழிக்கொள்கை, மும்மொழிக் கொள்கை குறித்து ஒன்றிய அரசிடமிருந்து கடிதம் வந்ததாகவும், அந்த கடிதத்திற்கு விளக்கம் தந்ததாகவும் அதில் ஒரு தவறான கருத்தை நாடாளுமன்றத்தில் பதிவு செய்யக்கூடிய நிலையில் இருந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தயவுசெய்து எந்தச் சந்தேகமும் படவேண்டாம். அதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் இதை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்றுதான் அவர்களுக்குநாங்கள்விளக்கம்தந்திருக்கிறோம்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.3.2025) சட்டமன்றப் பேரவையில், இருமொழிக் கொள்கை தொடர்பான சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றினார்.

### புதுடெல்லியில் வலியுறுத்த வேண்டும்!

இந்த நேரத்தில் என்னுடைய அன்பான வேண்டுகோள். ஏனென்றால், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.வைச் சார்ந்த எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது நாங்கள் என்றைக்கும் இந்த விஷயத்தில் ஒற்றுமையாக இருப்போம் என்ற உறுதியைத் தந்திருக்கிறார்கள். **இன்று காலையில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. டெல்லிக்குச் சென்றிருக்கும் நேரத்தில் யாரைச் சந்திக்கப் போகிறார் என்ற அந்த செய்தியும் வந்திருக்கிறது. அப்படி சந்திக்கும் நேரத்தில் இதுகுறித்து அவர் அங்கே வலியுறுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த அவையின் மூலமாக நான் எடுத்துவைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.**

பேரவைத் தலைவர் அவர்களே!

தமிழ்நாட்டு மக்களின் உயிர்நிறைக் கொள்கையான இருமொழிக் கொள்கை குறித்து மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளோடு தமிழ்நாடு அரசும் முழுமையாக உடன்படுகிறது என்பதை இந்த மாமன்றத்தில் நான் மீண்டும் உறுதி செய்கிறேன்.

தமிழும் ஆங்கிலமும்தான் தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கை. அதில் எந்த மாற்றமும் இல்லை. இது மொழிக் கொள்கை மட்டுமல்ல; நமது வழிக் கொள்கையும் விழிக் கொள்கையும் இதுதான்!

எந்தப் பழிச்சொல் சொன்னாலும், இந்த உயிர்க் கொள்கையில் விட்டுத் தர மாட்டோம்; விட்டு விலக மாட்டோம் என்பதை இம்மாமன்றத்தில் உறுதியாக மீண்டும் மீண்டும் நான் பதிவு செய்கிறேன்.

இந்தியை ஏற்காவிட்டால் பணம் தர மாட்டோம் என்று மிரட்டினாலும்; பணமே வேண்டாம் தமிழ்மொழி காப்போம் என்ற அந்த உறுதியை நான் பல்லாயிரக் கணக்கான ஆசிரியப் பெருமக்கள் முன்னிலையில் விருத்தாசலத்தில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் கழக மாநாட்டில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்.

### இருமொழிக் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை!

இரண்டாயிரம் கோடி என்ன? பத்தாயிரம் கோடி கொடுத்தாலும் மும்மொழித் திட்டத்தை ஏற்க மாட்டோம் என்று குறிப்பிட்டேன். மீண்டும் சொல்கிறேன், இது பணப்பிரச்சினை அல்ல; நம் இனப்பிரச்சினை! நம் தமிழை, தமிழினத்தை, தமிழ்நாட்டு மாணவக் கண்மணிகளை, இளைய சமுதாயத்தைக் காக்கும் பிரச்சினை!

### இனமானத்தை அடமானம் வைக்கும் கொத்தடிமைகள் அல்ல நாங்கள்!

அவர்கள் நிதி தரவில்லை என்பதற்காக இனமானத்தை அடமானம் வைத்து வெகுமானம் பெறும் கொத்தடிமை அல்ல நாங்கள். தடைக்கற்கள் உண்டு என்றால், அதை உடைத்து எரியும் தடந்தோள்கள் உண்டென்று சொல்லும் திராவிட மாடல் ஆட்சி இது. இந்த ஆட்சியில், சமூகநீதியும் தமிழ்மொழிக் காப்பும் இருகண்கள்!

### இருமொழிக் கொள்கை தீர்மானம்!

இதே மாமன்றத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 23.1.1968 அன்று இருமொழிக் கொள்கை தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

1. மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்த மன்றம் ஏற்க மறுக்கிறது.

2. மத்திய அரசின் திட்டத்தை ஏற்க மறுக்கும் வகையிலும், மாணவர் எண்ணத்துக்கு மதிப்பளிக்கும் வகையிலும் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் தமிழ்,

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### அண்ணா அளித்த மாபெரும் கொடை!



**இதே மாமன்றத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, 23.1.1968 அன்று இருமொழிக் கொள்கை தீர்மானம் கொண்டு வரப்பட்டது.**

*1. மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்த மன்றம் ஏற்க மறுக்கிறது.*

*2. மத்திய அரசின் திட்டத்தை ஏற்க மறுக்கும் வகையிலும், மாணவர் எண்ணத்துக்கு மதிப்பளிக்கும் வகையிலும் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிக் கொள்கையே செயல்பாட்டில் இருக்கும்.*

**இது தமிழ்நாட்டுக்கு பேரறிஞர் அண்ணா அளித்த மாபெரும் கொடை! இது கொள்கை மட்டுமல்ல; தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சட்டம்!**